**செய்தி வெளியீடு எண் :585** **நாள்: 12.04.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளதற்கிணங்க, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்தில் இன்று (12.04.2022) பத்திரிகைத் துறையில் புகைப்படக் கலைஞராக பணியாற்றிய திரு.டி.குமார் அவர்கள் அகால மரணமடைந்ததையொட்டி, பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து சிறப்பு நிகழ்வாக ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.

மேலும், தமிழரசு அலுவலகத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் கணினி இயக்குபவராக பணியாற்றிய திரு.கோ.முரளிகிருஷ்ணன் அவர்கள் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்ததையொட்டி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சத்திற்கான காசோலையை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர்.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர்கள் திரு.தி.அம்பலவாணன், திரு.ச.பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in